CoverageReport: TCS IT Wiz – Coimbatore Edition

**Publication:** Daily Thanthi
**Date:** 30/08/2014
**Edition:** Coimbatore
**Page No:**22
**Headline:**Kothagiri St Judes Public School wins TCS IT Wiz

சியில் கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவ–மாணவிகள் கலந்து கொண்டனர்.



வினாடி– வினா போட்டியில் முதலிடம் பிடித்த கோத்தகிரி புனித ஜூட்ஸ் பள்ளி மாணவர்களுக்கு, ரவி விஸ்வநாதன் பரிசு வழங்கிய போது எடுத்தபடம்.

**வினாடி–வினா போட்டி:**

## கோத்தகிரி புனித ஜூட்ஸ் பள்ளி மாணவர்கள் முதலிடம்

கோவை,ஆக.30–

பள்ளி மாணவர்களுக்கு இடையிலான வினாடி–வினா போட்டி டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் நிறுவனம் சார்பில், கோவை ஆர்.எஸ்.புரத்தில் உள்ள மாநகராட்சி கலையரங்கில் நடைபெற்றது. இதில் கோவை,கோத்தகிரி,குன்னூர்,மேட்டுப்பாளையம்,பொள்ளாச்சி,திருப்பூர்,சேலம் உள்பட பல்வேறு இடங்களில் உள்ள 72 பள்ளிகளை சேர்ந்த 479 மாணவ–மாணவிகள் கலந்து கொண்டனர்.

தகுதி சுற்று போட்டிகளை தொடர்ந்து கோவை ஜி.கே.டி. மெட்ரிக் பள்ளி, எஸ்.பி.ஓ.ஏ. பள்ளி, சுகுணா பிப்ஸ் பள்ளி, மேட்டுப்பாளையம் சச்சிதானந்த ஜோதி நிகேதன் பள்ளி, குன்னூர் ஸ்டேன்ஸ் பள்ளி, கோத்தகிரி புனித ஜூட்ஸ் பப்ளிக் பள்ளி ஆகிய 6 பள்ளிகள் இறுதி சுற்றுக்குள் நுழைந்தன. அதில் 50 புள்ளிகள் பெற்ற கோத்தகிரி புனித ஜூட்ஸ் பப்ளிக் பள்ளி மாணவர்கள் ஆஷிக் ரெஜி, அஸ்வின் பிலிப் ஆகியோர் முதலிடம் பிடித்து, மும்பையில் நடக்கும் அடுத்த சுற்று போட்டிக்கு தகுதி பெற்றனர்.

40 புள்ளிகள் பெற்ற ஜி.கே.டி. மெட்ரிக் பள்ளி மாணவர்கள் சரத்சுந்தர், ஹரிகிருஷ்ணன் ஆகியோர் 2–வது இடத்தை பிடித்தனர். போட்டிகளை தொடர்ந்து நடைபெற்ற விழாவில் டாட்டா கன்சல்டன்சி சர்வீசஸ் நிறுவன தலைவர் ரவி விஸ்வநாதன் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார்.

Rediffusion/Edelman

CoverageReport: TCS IT Wiz – Coimbatore Edition

**Publication:** Daily Thanthi
**Date:** 30/08/2014
**Edition:** Coimbatore
**Page No:**22
**Headline:**Quizmaster GiriPickbrain Ideas

பொழுதுபோக்குக்காக நடத்துவதில் பயன் இல்லை:

# வினாடி-வினா போட்டிகள் அறிவை அடிப்படையாக கொண்டு இருக்க வேண்டும்

## சர்வதேச குவிஸ் மாஸ்டர் ஆலோசனை

கோவை,ஆக.30-

வினாடி-வினா போட்டிகள் அறிவை அடிப்படையாக கொண்டு இருக்க வேண்டும். பொழுதுபோக்குக்காக நடத்துவதில் எந்த பயனும் இல்லை என்று சர்வதேச குவிஸ் மாஸ்டர் ஆலோசனை தெரிவித்து உள்ளார்.



கிரி பிக்பிரைன்

### வினாடி-வினா போட்டி

மாணவ-மாணவிகளின் அறிவை வளர்ப்பதற்காக நடத்தப்பட்டு வரும் வினாடி -வினா போட்டிகள், காலத்திற்கு ஏற்றவாறு மாற்றங்கள் செய்யப்பட்டு, பொழுதுபோக்கு அம்சங்கள் மிகுந்ததாக மாறிவருகின்றன. ஆரம்பத்தில் கேள்விக்கு பதில் என்று நடத்தப்பட்ட வினாடி வினா போட்டிகள் வீடியோ, புகைப்படங்களை திரையிட்டு கேள்வியில் இருந்தே பதில்கள் கண்டறியப்பட்டன.

இந்தநிலையில் பொழுது போக்கு என்ற பெயரில் நடத்தப்படும் வினாடி-வினா போட்டிகளில் ஆண், பெண் அந்தரங்க விஷயங்கள் முதல் தேவையில்லாத, தொடர்பே இல்லாத கேள்விகள் எழுப்பி, போட்டியாளர்களை திணறடிப்பதுடன், பார்வையாளர்களையும் முகம் சுழிக்க வைக்க சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. இது குறித்து கோவையில் நடந்த வினாடி-வினா நிகழ்ச்சியில் கலந்துகொண்ட சர்வதேச குவிஸ் மாஸ்டர் கிரி பிக்பிரைன் பேசும்போது கூறியதாவது:-

### அறிவு சார்ந்த சமுதாயம்

வினாடி-வினா போட்டிகள் அறிவை அடிப்படையாக கொண்டும், பொழுதுபோக்கை அடிப்படையாக கொண்டும் என 2 வகைகளாக நடத்தப்படுகிறது. அறிவை அடிப்படையாக கொண்டு நடத்தப்படும் போட்டிகள் பங்கேற்பாளர்களின் சிந்தனையை தூண்டுவதுடன், அறிவை வளர்ப்பதாகவும் அமைகிறது.

அறிவை அடிப்படையாக கொண்டு போட்டிகள் நடத்துவதன் மூலம், எதிர்காலத்தில் அறிவு சார்ந்த சமுதாயத்தை உருவாக்க முடியும். படிக்கும் பாடத்திற்கு அப்பாற்பட்டு, மாணவர்களுக்கு பொது அறிவு சார்ந்து எந்தெந்த விசயங்கள் தெரிகிறது, என்பதை வினாடி வினா போட்டிகள் வெளிப்படுத்துகின்றன. நான் இதுவரை இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், துபாய், லண்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளில் வினாடி - வினா போட்டி நடத்தி உள்ளேன்.

### உலக அளவில் போட்டி

இதில் இந்திய மாணவர்கள் பொது அறிவு மட்டும் இல்லாமல், நுண்ணறிவிலும் சிறந்து விளங்குகிறார்கள். இதை தொடர வேண்டும். ஏனெனில் தற்போதைய உலகம் போட்டி மிகுந்ததாக உள்ளது. இதற்கு ஏற்ப இந்திய மாணவர்களை உலக அளவில் போட்டியிடும் அளவுக்கு அறிவாளிகளாகவும், திறமைசாலிகளாகவும் உருவாக்க வேண்டும்.

உலக அளவில் இயங்கும் தலைசிறந்த நிறுவனங்களின் முதன்மை செயல் அதிகாரிகளாக இந்தியர்களே அதிக அளவில் பணியாற்றி வருகிறார்கள். இதை மேலும் அதிகரிக்க, வினாடி- வினா போட்டிகளை அதிக அளவில் நடத்தி அறிவில் சிறந்து விளங்கும் மாணவர்களை அடையாளம் காண வேண்டும். வினாடி -வினா போட்டிக்கு தயாராகும் போது மாணவர்கள் அதிக அளவில் விசயங்களை தெரிந்து கொள்கிறார்கள்.

### தன்னம்பிக்கை அதிகரிக்கிறது

இதனால் அவர்களுக்கு தன்னம்பிக்கை அதிகரிக்கிறது. வாழ்க்கையில் எந்த பிரச்சினை வந்தாலும் அதை எதிர்கொள்ளும் தைரியம் அவர்களுக்கு வருகிறது. எனவே பள்ளிகளில் மாணவர்களின் பொது அறிவை வளர்ப்பதற்கு சிறப்பு பயிற்சிகள் அளிப்பதுடன், அது மாணவர்களை சென்றடைந்து உள்ளதா? என்பதை அறிவதற்கு அவ்வப்போது வினாடி -வினா போட்டிகளை நடத்த வேண்டும்.

அதன்பின்னர் மற்ற பள்ளிகளை ஒருங்கிணைத்து போட்டிகள் நடத்த வேண்டும். இதனால் மாணவர்களின் அறிவுத்திறன் படிப்படியாக அதிகரிக்கும். இவ்வாறு நன்கு பயிற்சி பெறும் மாணவர்கள் மத்திய, மாநில அரசு பணிகளுக்கு நடத்தப்படும் தேர்வுகளில் எளிதாக வெற்றி பெறுவதுடன், நேர்காணல்களையும் எளிதாக அணுகி உயர்ந்த பதவிகளை பெற்றுவிட முடியும்.

### பொழுதுபோக்கு போட்டிகள்

இந்தநிலையில் வித்தியாசமாக ஏதாவது நடத்த வேண்டும் என்பதற்காக பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த போட்டிகளை நடத்துவதால், சமுதாயத்திற்கு எந்தவித பயனும் கிடைக்காது. இதுபோன்ற போட்டிகளில் மாணவர்களை ஈடுபடுத்தக்கூடாது. அது அவர்களின் அறிவுத்திறனை பாதிப்பதுடன், பொழுதுபோக்கு சிந்தனைகள் மேலோங்கிவிடும். அது தவிர்க்கப்பட வேண்டும். அறிவு சார்ந்த வருங்கால தலைமுறையை உருவாக்கும் வகையிலான, அறிவை அடிப்படையாக கொண்டு மட்டுமே வினாடி -வினா போட்டிகள் நடத்தப்பட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.